# தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்னை பொதிகை தொலைக்காட்சியிலும், வானொலியிலும் 7.12.2006 அன்று ஆற்றிய கொடி நாள் உரை

அன்பிற்குரிய தாய்மார்களே,

பெரியோர்களே,

நண்பர்களே,

என் உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புகளே,

வணக்கம்.

இன்று கொடி நாள்!

நமது நாட்டுத் தேசியக் கொடியை நினைந்து வணங்கும் திருநாள், இந்தக் கொடி நாள்!

நாட்டு வரலாற்றில் வீரத்தின் சின்னமாய் நிலைபெற்று விட்ட, "அஞ்சா நெஞ்சன் பகத்சிங் ஏற்றிட நினைத்த நமது கொடி –

அறப்போர் வீரன் திருப்பூர் குமரன்
திருக்கரம் ஏந்திய தேசிய கொடி –
பற்று மிகக் கொண்டு நாட்டின் மீது –
பாஷ்யம் என்ற வீர இளைஞன் –
கோட்டை கொத்தளத்தில் ஏறி கொடிக்கம்பத்தில்
பறக்கவிட்ட
பார்புகழும் மணிக்கொடி –
அல்லும் பகலும் அணுப்பொழுதும் மறவாமல்
அன்னைத் திருநாட்டின் அடிமைத்தனம் அகற்றிட
அண்ணல் காந்தியடிகள் உயர்த்திப் பிடித்த
உரிமைக்கொடி –
வேலும் வாளும் உண்டாக்கிய ரத்தக் கடலில்
பயங்கர மூச்சு விட்டுக் கொண்டு மிதந்து செல்லும்
வீரர்களின் மண்டையோடுகளை முத்தமிட்டபடி
பயணம் நடத்தும் முறிந்த எலும்புத் துண்டுகளையும்
அறுந்த நரம்புத் துகள்களையும் கண்டு

**முகம் சுளிக்காமல் – முகாரி பாடாமல் –**

**முதுகு காட்டாமல் –**

**"முன்னேறு நீ " "முன்னேறு நீ "**

**என்று முரசொலித்து**

**எஞ்சிய வீரர்களை நெஞ்சுரம் கொள்ளச் செய்து**

**எந்த நேரத்தில் எந்தப் பக்கமிருந்து ஈட்டி பாயுமோ**

**எதிரிகளின் துப்பாக்கிக் குண்டு பாயுமோ என்று**

**சாவு முகட்டிலே விநாடிகளைக் கணக்குப் பார்ப்பதும்**

**வீரர்களுக்கு அழகில்லை என்ற**

**போர்க்களத்து அரிச்சுவடியைத் தவறியும்**

**மறந்து விடாமல் –**

**மரணம் மாவீரனுக்குத் தரப்படும் மலர்ச் செண்டு,**

**மங்கையின் இதழை விடச் சுவையானது என்ற**

**மனோபலத்தோடு இந்த மண் மீட்கப் போர்புரிந்து**

**மாண்டவர்களின் குருதிப் புனலிலே**

**தோய்த்தெடுத்த கொடி!" இந்த கொடி !**

**இன்று கோட்டை முதல் குடிசை வரை**

**நாடு முழுதும் பட்டொளி வீசிப் பறக்கிறது!**

**இந்தக் கொடி பறக்க ஏறத்தாழ இருநூறு ஆண்டுகாலம் இங்கிலாந்து நாட்டுப் பேரரசை எதிர்த்துப் போராடி இன்னுயிர் ஈந்த, செக்கிழுத்துச் சிறைப்பட்ட, சொத்து சுகங்களை இழந்து சொல்லொணாத் தொல்லைகளுக்கு ஆட்பட்ட வீரத் தியாகிகளை நினைவுகூர்ந்து நமது வீர வணக்கத்தைச் செலுத்திட நமக்கு உணர்வூட்டும் உன்னதப் பெரு நாள் இந்தக் கொடி நாள்!**

**இந்நாளில் வீரர்களுக்கு வணக்கம் செலுத்துவதும் வாழ்த்துரைப்பதும் நமது தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாடுகளிலே ஒன்றாகும்.**

**பிஞ்சு நெஞ்சு முதல் வீர உணர்வுகளைத் தாய்ப்பாலாக ஊட்டி, இளைஞர்களை வீரம் கொப்பளிக்க வளர்த்து ஆளாக்குவதை இயல்பாகக் கொண்டது தமிழினம் என்பதை நமது இலக்கியங்கள் சொல்கின்றன.**

"ஈன்றுபுறம் தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அரும்சம முருக்கிக்
களிறெ றிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

- என்று ஒரு குழந்தையை வீரனாக்கி வளர்ப்பதில், சமுதாயத்திலே ஒவ்வொருவருக்கும் உள்ள கடமை எது என்பதனை உணர்த்தி உணர்த்தி, இளைஞர்களை வீரர்களை உருவாக்கி வளர்த்த சமுதாயம் தமிழ்ச் சமுதாயம்!

உன் மகன் எங்கே என்று கேட்டவர்க்குத்
தன் வயிற்றையே சுட்டிக் காட்டி, இது வயிறல்ல;
இது புலிக்குகை; இக்குகையிலிருந்து புறப்பட்ட புலிதான் என் மகன்! அவன் எங்கே இருப்பான்?
போர்க்களத்தில்தான் இருப்பான் என்று பெருமிதம் தோன்ற மகனுடைய வீரத்தை மற்றவர் முன் பாராட்டி
மகிழும் மறக்குல மகளிராகப் பெண்களெல்லாம்
விளங்கிய சமுதாயம் தமிழ்ச் சமுதாயம்!

முதல் நாள் போரிலே தன் தமையன் யானையோடு போரிட்டு, அதனை வீழ்த்தித் தானும் மடிந்தான்; அடுத்தநாள் போரில் அவளுடைய ஆசைக் கணவனும் போர்க்களம் சென்று வீழ்ந்துபட்டான்;

அடுத்த நாளும் போர்ப்பறை முழங்கக் கேட்கிறாள் ஒரு வீரமங்கை! உள்ளம் பதறுகிறது அவளுக்கு! அவளுக்கு இருப்பதோ ஒரே மகன்! அவனும் சிறுவன்! ஒரு கணமும் வீணாக்காமல் அழைத்தால் அவனை! பரந்துகிடந்த அச்சிறுவனின் தலைமுடியில் எண்ணெய் தடவி, வாரி முடித்து, வெள்ளாடை உடுத்தி, வேல் கைகொடுத்து, செல்க மகனே! சீறிவரும் பகைவர்களைக் கொன்று வெற்றியோடு மீண்டுவா என் செல்வ மகனே! என்று கூறி அவனைப் போருக்கு அனுப்பினாள் அவள்!

அந்த வீரமங்கையின் தீரத்தை - மன எழுச்சியை - இந்த நாட்டின் மீது அவள் கொண்ட பற்றைக் கண்டோரெல்லாம் சிந்தை மறந்து செய்வதறியாது வியந்து நின்றார்கள் என்று புறநானூறு புகல்கிறது.

இப்படி வீரத்திலும் நாட்டுப் பற்றிலும் ஆணுக்குப் பெண் இளைப்பின்றி, ஆணும் பெண்ணும் சிறந்து விளங்கிய வீர சமுதாயம் தமிழ்ச் சமுதாயம்!
வீரத்தைப் போற்றி வளர்த்த சமுதாயம் தமிழ்ச் சமுதாயம்!

அந்த உணர்வோடு இன்றைய நிலையிலும் தமிழக அரசு வீரத்தை மதிக்கிறது. வீரர்களைப் போற்றுகிறது;

நமது முப்படை வீரர்களும் போர்க் காலங்களில் மட்டுமல்லாமல், எல்லைப் புறங்களைக் காத்திடும் பணிகளிலும், புயல், பெருமழை போன்ற இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படுவோரை மீட்டுக் காப்பதிலும் ஈடுபட்டு எல்லையில்லா இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். அந்த மாவீரர்கள் கொட்டும் மழை, கொடுங்குளிர், கடும்பனி, என எதுவாயினும் கலங்காது நின்று கடமையாற்றுகிறார்கள்.

அத்தகைய தியாகத் திருச்சுடர்கள் அனைவர்க்கும் ஊக்கம் தர, "உங்களைக் காக்க—உங்கள் குடும்பத்தைக் காக்க, நாங்கள் இருக்கிறோம்; கலங்காது நின்று கடமையாற்றுங்கள்" என அந்த மாவீர மாமணிகளுக்கு மனவலிமையூட்டிட நாடு கடைப்பிடித்திடும் நல்ல திருநாளாகக் கொடி நாளைக் கருதுகிறோம்.

நமது வாழ்வு, நமது மகிழ்ச்சி, நமது சுதந்திரம், நமது நாட்டுரிமை, நமது பாதுகாப்பு அனைத்துக்கும் அந்த வீரர்களே பொறுப்பேற்றுள்ளார்கள். நம் குடிகாக்கப் போரிட்டவருக்கு இந்தக் கொடி நாளில் நன்றி செலுத்துதலே முறையாகும்.

கொடிய போர்க்களத்தில் தாம் இருந்தாலும் தம்மை நம்பி இருக்கும் குடும்பத்தைக் காப்பாற்ற நாடு இருக்கிறது, நாமெல்லாம் இருக்கிறோம் என்ற நம்பிக்கையில்தானே அந்த வீரர்கள் போர்க்களம் நோக்கிப் புறப்பட்டார்கள். அவர்தம் நம்பிக்கையை நாசம் அடைய விடமாட்டோம். மாசுமருவற்ற அந்த மாணிக்கங்களின் குடும்பத்தில் வறுமை எனும் துசுபடர விடமாட்டோம் என்னும் உணர்வோடு இந்தக் கொடிநாளில் நிதி வழங்கிடுவோம்.

நாடு காக்கும் திருப்பணிகளுக்கு நிதி வழங்குவதில் தமிழகம் என்றும் முன்னணியிலே நிற்பதையே வழக்கமாகக் கொண்டுள்ளது.

1962 இல் சீனப் போரின் போது ஆட்சியில் நாம் இல்லாதபோதும், பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆணையை ஏற்று, சேலத்திலே மாநாடு நடத்தி, போர் நிதி திரட்டி அந்நிதியை அப்போதைய முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்களிடம் சேர்ப்பித்தோம்.

1971இல் பாகிஸ்தான் நம்நாட்டின் மீது போர் தொடுத்தது. 7.12.1971 அன்று வானொலியில் ஆற்றிய "கொடிநாள்" உரையில் நான் அறிவித்ததற்கு ஏற்ப, இந்திய–பாகிஸ்தான் போரிலே உயிர்நீத்த தமிழகத்தைச் சேர்ந்த வீரர்கள் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தமிழக அரசின் சார்பில் நிதி வழங்கியதோடு அவர்கள் குடும்பம் நன்றாக இருந்தால்தான், அவர்கள் வாழ்வு நன்றாக இருந்தால்தான் நமக்கு வாழ்வு என்பதால் அவர்கள் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் நஞ்சையாக இருந்தால் ஒன்றரை ஏக்கர் நிலமும், புஞ்சையாக இருந்தால் 3 ஏக்கர் நிலமும் இலவசமாக அளித்தோம்.

1972–ஆம் ஆண்டு மே திங்கள் 21ஆம் நாள்; இந்திய பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களைச் சென்னைக்கு அழைத்து அவருடைய கையில் 6 கோடி ரூபாயைப் போர்நிதியாக வழங்கினோம்.

அதேபோல, 1999 இல் நிகழ்ந்த கார்கில் போராட்டத்தின் போதும், தமிழக மக்கள் வழங்கிய 59 கோடி ரூபாயில், 50 கோடி ரூபாயை அந்நாளைய பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களிடம் தேசியப் பாதுகாப்பு நிதிக்காக வழங்கினோம்.

கார்கில் போரில் உயிரிழந்த தமிழகத்தைச்சேர்ந்த 19 வீரர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கியதோடு, உயர்வருவாய்ப் பிரிவு குடியிருப்பு ஒன்றும், அவ்வீரர்கள் குடும்பத்தைச் சார்ந்த ஒருவருக்கு அரசு வேலைவாய்ப்பும் அளித்தோம்.

எஞ்சிய தொகை, 'கார்கில் இராணுவ வீரர் நிவாரண நிதி' என இருப்பு வைக்கப்பட்டு, அந்நிதியிலேயிருந்து எல்லைப் புறங்களில் பாதிக்கப்படும் தீரர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இப்படி இயன்ற வழிகளில் எல்லாம் முன்னாள் படைவீரர் நலம் காப்பதில் நாம் முனைப்போடு செயல்பட்டு, இந்திய அளவில் தமிழகத்திற்குப் பெருமைகள் சேர்த்துள்ளோம். இந்தப் பெருமைகள் தொடர, இந்த ஆண்டின் கொடிநாள் நிதி வழங்குவதிலும் அதிக நிதி அளித்துச் சாதனைகள் படைத்திடுவோம்.

நாடு காக்கும் வீரர்களின்
நலம் காப்போம்!
அவர்தம் குடும்பங்கள் உளம் மகிழ
வளம் சேர்ப்போம்!

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
விதியினை எதிர்த்து வீரம் விளைத்த
தீரர் குடும்பம் கதியில்லை யெனக்
கதறி அழவிடாது கை கொடுப்பீரே!"

என்று என்னருமைத் தமிழக மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து விடைபெறுகிறேன்.

வணக்கம்.